**வரையறுக்கப்பட்ட கொலதெனியா கைத்ரோபவர் (தனியார்) கம்பனி – 2017**

வரையறுக்கப்பட்ட கொலதெனியா கைத்ரோபவர் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது அபிப்பிராயத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு

இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ) எனது அபிப்பிராயத்தில்:

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன்.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகளை முன்னைய ஆண்டிற்கான ரூபா 54,757,419 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 69,585,957 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றினை விளைவித்திருந்தமையினால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 14,828,538 முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. மின்வலு உற்பத்தியிலிருந்தான வருமானம் அதிகரித்தமையே நிதிசார் விளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

### 3.2.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கக்கூடிய தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறுள்ளது.

| | 2017 | 2016 |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 60 | 55 |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1:16 | 1:54 |

வருமானம் ரூபா 12 மில்லியனால் பிரதானமாக அதிகரித்தமை காரணமாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப விகிதம் 09 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**3.2.2 கம்பனியின் இலாபத்தன்மை**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான பாரிய வருமானம் மற்றும் செலவின விடயங்களுடனான முரண்கள் பின்வருமாறு.

| வகை | 2017 | 2016 | முரண் {சாதகம் / (பாதகம்)} | சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா. | % |
| மின்வலு பொறியை வாடகைக்கமர்த்துவதிலிருந்தான வருமானம் | 88,427,927 | 75,767,005 | 12,660,922 | 17 |
| விற்பனை கிரயம் | 35,027,564 | 33,921,202 | (1,106,362) | 3 |
| நிர்வாகச் செலவினங்கள் | 9,228,418 | 3,893,565 | (5,334,853) | 137 |
| நிலையான வைப்புக்களிலிருந்தான வட்டி வருமானம் | 24,717,492 | 12,681,516 | 12,035,976 | 95 |

மின்வலு பொறியை வாடகைக்கமர்த்துவதிலிருந்தான மொத்த வருமானம் மற்றும் நிலையான வைப்புக்களிலுள்ள முதலீடுகள் மீளாய்வாண்டில் ரூபா 24.69 மில்லியனால் அண்ணளவாக அதிகரித்துக் காணப்பட்ட போதிலும், சீஎஸ்ஆர் செயற்திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகள் அதிகரித்தமை காரணமாக நிர்வாகச் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய செலவினங்கள் ரூபா 5 மில்லியனால் அண்ணளவாக அதிகரித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

தேசிய மின்சார விநியோக அமைப்புக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக சிறிய கைற்கோ மின்பொறியை கட்டியெழுப்புதல், செயற்படுத்தல் மற்றும் முகாமைசெய்தல் என்பன கம்பனியின் பிரதான நோக்கமாக காணப்படுகின்றது. அதற்கிணங்க, கம்பனியின் மின் உற்பத்தி மற்றும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளின் போது அவற்றிலிருந்து உழைக்கப்பட்ட வருமான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | மின்வலு உற்பத்தி | வருமானம் |
|---|---|---|
| | கிலோவாற் (Kwh) | ரூபா.மில்லயன் |
| 2017 | 5,461,989 | 88.43 |
| 2016 | 4,692,097 | 75.76 |
| 2015 | 6,080,937 | 97.23 |
| 2014 | 5,753,953 | 91.54 |

சாத்தியவள ஆய்வுக் கற்கைகள் கட்டத்தில் மதிப்பிடப்பட்ட வருடாந்த மின் உற்பத்தி 4,688,086 கிலோவாற் (Kwh) ஆகக் காணப்பட்ட போதிலும், மதிப்பிடப்பட்ட

எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் உள்ளபடியான மின் உற்பத்தி நன்கு முன்னோக்கி காணப்பட்டது.

**5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு, 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் ஒவ்வொரு பொது நிறுவனங்களும் செயற்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2030 ஆம் ஆண்டிற்கான குறித்த நிகழ்ச்சிநிரலினை அறித்திருக்காமையின் காரணமாக, கம்பனியினால் அடைந்து கொள்ளவேண்டிக் காணப்பட்ட இலக்குகள் மற்றும் அதன் பரப்பெல்லையுடன் தொடர்புபட்டுக்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை இனங்காண்பதற்கு கம்பனி நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை.